**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்**

**S.T.C. 45/ 2016**

2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி - 1 ஆக திரு.கலியபெருமாள் என்பவரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சு.தனஞ்செயன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கலியபெருமாள் | வயது | : |
| த/பெ.(அ) க/பெ | : | | தொழில் | : |
| ஊர் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | ஜாதி | : |
| மாவட்டம் | : | | | : |

**முதல் விசாரணை**

நான் கண்டியங்கொல்லையில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 4.00 மணியளவில் என் மருமகன் தேவதாசன் என்பவரும் என் பேரனும் மோட்டார் சைக்கிளில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி கண்டியங்கொல்லை மெயின்ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது மணியார் வீடு அருகே எதிரே வந்த ஒரு இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. அதில் என் மருமகனுக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. என் பேரனுக்கு வலது கால் எலும்பு முறிந்துவிட்டது. சந்திரகாசு என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அடிபட்ட இருவரும் திருச்சி கே.எம்.சி தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார்கள். நான் அங்கு சென்று பார்த்தேன். ஜெயங்கொண்டம் போலீசார் மருத்துவமனைக்கு வந்து என் மருமகன் அடிபட்டதில் பேசமுடியாமல் இருந்ததால் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என் மருமகன் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணோ மோதிய வாகனத்தின் பதிவு எண்ணோ எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் நான் கொடுத்தது தான். நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ-1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்**

**S.T.C. 45/ 2016**

*2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி - 2 ஆக திரு.தேவதாசன் என்பவரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சு.தனஞ்செயன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.*

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தேவதாசன் | வயது | : |
| த/பெ.(அ) க/பெ | : | | தொழில் | : |
| ஊர் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | ஜாதி | : |
| மாவட்டம் | : | | | : |

***<u>முதல் விசாரணை</u>***

*நான் செம்மன்பள்ளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். தமிழ்நாடு காவல் துறையில் அரியலூர் மாவட்ட எஸ்பிசிஐடி பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது மாமனார். கடந்த 10.11.2015ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் எனக்கு சொந்தமான டிஎன் 61 இ 4585 என்ற ஹோண்டா சைன் என்ற இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட என் மகன் ஆனந்தகுமார் பின்னால் அமர்ந்து வர வாரியங்காவலில் இருந்து ஜெயங்கொண்டம் செல்வதற்காக வடக்கில் இருந்து தெற்குநோக்கி வந்து கொண்டிருந்தபோது வாரியங்காவல் விஏஓ செல்வதுரை வீடு அருகே வந்தபோது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி டிஎன் 61இ 4613 என்ற பஜாஜ் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் சாலையின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்த எங்கள் வண்டி மீது திடீரென்று எங்கள் பக்கமாக சாலையில் ஏறிவந்து மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது. எதிரே வந்த வாகனம் அதிவேகமாக வந்து மோதியதில் எனக்கு வலது கால் முட்டிக்கு கீழே ரத்த காயம் ஏற்பட்டது. என் மகனுக்கு வலது முட்டிக்கு கீழே எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது. எங்கள் மீது மோதி அந்த இரு சக்கர வாகனம் கட்டுபாட்டை இழந்து கீழே விழுந்துவிட்டது. அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு எங்கு அடிபட்டது என்று நான் பார்க்கவில்லை. அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன். அவரை மீண்டும் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். (எதிரி ஆஜர் இல்லாததால் எதிரியை அடையாளம் காட்டும் பொருட்டு முதல் விசாரணை சாட்சியம் வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்க வேண்டி அனுமதிக்கப்படுகிறது)*

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்

**S.T.C. 45/ 2016**

2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி - 3 ஆக திரு.ஆனந்தகுமார் என்பவரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சு.தனஞ்செயன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஆனந்தகுமார் | வயது | : |
| த/பெ.(அ) க/பெ | : | | தொழில் | : |
| ஊர் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | ஜாதி | : |
| மாவட்டம் | : | | | : |

**முதல் விசாரணை**

நான் செம்மன்பள்ளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பனிரெண்டாம் வகுப்பு படித்து வருகிறேன். அ.சா.1 எனது தாத்தா. அசா.2 எனது அப்பா. 10.11.2015ம் தேதி மாலை 4.00 மணியளவில் வாரியங்காவலில் இருந்து ஜெயங்கொண்டம் செல்வதற்காக டிஎன் 61 இ 4585 என்ற ஹோண்டா சைன் என்ற இருசக்கர வாகனத்தில் என் அப்பா தேவதாசன் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து கொண்டு வி.ஏ.ஓ. செல்வதுரை வீடு அருகே சாலையின் இடது புறமாக நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது எதிர் திசையில் டிஎன் 61 இ 4613 என்ற பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தை ஓட்டி வந்த நபர் அதிவேகமாக கட்டுபாடு இல்லாமல் வந்து நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. என் அப்பாவிற்கு வலது காலில் முழங்காலுக்கு கீழ் காயம் ஏற்பட்டுவிட்டது. எனக்கு வலது கால் முட்டிக்கு கீழும் பாதத்திலும் அடிபட்டு முழங்காலுக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபரை எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அடிபட்ட நாங்கள் இருவரும் திருச்சியில் உள்ள கேஎம்சி காவேரி தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்

**S.T.C. 45/ 2016**

2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சி - 4 ஆக திரு.சந்திரகாசன் என்பவரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சு.தனஞ்செயன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சந்திரகாசன் | வயது | : | |
| த/பெ.(அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை**

நான் கண்டியங்கொல்லை கிராமத்தில் வசித்து வருகிறேன். உடல் நிலை சரியில்லாததால் வீட்டில் தான் இருக்கிறேன். அ.சா.1 முதல் 3 வரையிலானவர்களை தெரியும். சுமார் மூன்றரை வருடங்களுக்கு முன்பு மாலை 4.00 மணியளவில் செங்குந்தபுரம் செல்வதற்காக எனக்கு சொந்தமாக இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது மணியார் செல்வதுரை வீட்டிற்கும் சிமெண்ட் பேக்டரிக்கும் இடையில் அ.சா.2ம் அ.சா.3ம் ஹோண்டா இருச்சக்கர வாகனத்தில் அ.சா.2 ஓட்ட அ.சா.3 பின்னால் அமர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். நான் சென்றுகொண்டிருந்தபோது என்னை தாண்டி அ.சா.2ம் அ.சா.3ம் முன்னால் போனார்கள். அப்போது எதிரே பெரிய இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் அதிவேகமாக தெற்கில் இருந்து வந்து கட்டுபாடு இல்லாமல் அ.சா.2, 3 சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது. அ.சா.3க்கு வலது காலில் பலத்த அடிபட்டுவிட்டது. எதிரே வந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தில் வந்த நபர் கீழே விழுந்துவிட்டார். அடிபட்ட அ.சா.2, 3 இருவரையும் டாடா சுமோ மூலம் திருச்சியில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அ.சா.2, 3 வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. மோதிய இருச்சக்கர வாகனத்தின் பதிவு எண்ணும் எனக்கு தெரியாது. ஓட்டிய நபரை அன்று நான் பார்த்தேன். ஆனால் தற்போது சக்கரை நோயினால் கண் பார்வை மங்கிவிட்டது. அதனால் தற்போது எதிரியை பார்த்தால் என்னால் சரியாக அடையாளம் காட்ட முடியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.